பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 07 2026 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அடிப்படையிலான சேவைகளை வழங்க முன்வர வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

2. சாதி மத பாகுபாடின்றி அனைத்து தரப்பு மக்களின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு அரசு செயல்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

3. வியட்நாமில் நேரிட்ட படகு விபத்து குறித்து முழுமையான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் திரு. Le Minh Hun கூறியுள்ளார்.

4. அசாம், மேகாலயா, சிக்கிம், பிஹார் மாநிலங்களில் இன்று கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் Prithika Pradeep வெண்கலப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அடிப்படையிலான சேவைகளை வழங்க முன்வர வேண்டும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

ஹைதராபாதில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டின் செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர் மற்றும் மின்னணு சாதன உற்பத்தியில் ஹைதராபாத் முக்கிய பங்காற்றி வருவதாக குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர், மின்னணு சாதன உற்பத்தி மற்றும் நவீன உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவை இன்றியமையாதது என்று அவர் கூறினார்.

நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான பணியாளர்களை உருவாக்கும் வகையில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான பாடத்திட்டங்கள் ஏற்கனவே வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

செமிகண்டக்டர் உற்பத்தி செய்வதற்கான ஆலைகள் நிறுவப்பட்டு வருவதாகவும், மூன்று ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் செமிகண்டக்டர் சிப் ஐரோப்பா மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக அளவில் நிலவி வரும் திறன்வாய்ந்த பொறியாளர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் செமிகண்டக்டர் வடிவமைப்பு தொடர்பான நவீன கருவிகளை 315 பல்கலைக்கழகங்களுக்கு மத்திய அரசு வழங்கியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

மொபைல் சாதனங்களின் ஏற்றுமதி 20 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று திரு. அஷ்வினி வைஷ்ணவ் நம்பிக்கை தெரிவித்தார்.

**<<<<>>>>**

சாதி மத பாகுபாடின்றி அனைத்து தரப்பு மக்களின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு அரசு செயல்பட்டு வருவதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் சிறுபான்மையினர் கலாச்சார விழாவை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

நாட்டின் வளமான கலாச்சாரத்தை பாதுகாப்பதுடன், நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கல்வி, திறன் மேம்பாடு, தொழில்முனைவு, சந்தை வாய்ப்பு உருவாக்கம் போன்ற நடவடிக்கைகள் மூலம் சிறுபான்மையின மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு முழுவதும் உள்ள கைவினைக் கலைஞர்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளிலும் அரசு கவனம செலுத்தி வருவதாக திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<>>>>

குஜராத் மாநிலம் அகமதாபாதில் 405 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் இந்த ஆண்டு ஒரு கோடியே 25 லட்சம் மரக்கன்றுகளை நடும் திட்டத்தையும் அவர் தொடங்கி வைக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மியாவாக்கி காடு வளர்ப்பு முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள வனப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 60 லட்சம் மரக்கன்றுகளை அம்மாநில வனத்துறை நட திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<>>>>

பிராந்திய மொழிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் சட்டக் கல்வியை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்த தேசிய மாநாடு புதுதில்லியில் நடைபெற்றது.

ஹிந்தி மற்றும் பிற இந்திய மொழிகளில் நீதித்துறை சேவைகளை வழங்குவதற்கு ஏதுவாக சட்டக் கல்வியை மேம்படுத்தும் வகையில் 10 ஆண்டு காலத்திற்கான செயல்திட்டத்தை உருவாக்குவது குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மத்திய சட்டத்துறை மற்றும் இந்திய பார் கவுன்சில் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது.

<<<<>>>>

பிரபல திரைப்பட பின்னணிப் பாடகி எஸ். ஜானகி நேற்று மைசூருவில் காலமானார். அவருக்கு வயது 88.

மைசூருவில் உள்ள இல்லத்தில் அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரது உடலுக்கு முழு அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடைபெறும் என்று கர்காடக மாநில முதலமைச்சர் திரு. D.K. சிவகுமார் தெரிவித்துள்ளார்.

பதினேழு மொழிகளில் 48 ஆயிரத்திற்கும் அதிகமான திரைப்படப் பாடல்களைப் பாடி ரசிகர்கள் மனதில் நீங்காத இடம் பிடித்துள்ளார்.

நான்கு தேசிய விருதுகள், முப்பத்து மூன்று மாநில விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அவரது மறைவிற்கு பல்வேறு அரசியல் தலைவர்கள், திரைப்படத்துறையினர் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**<<<<>>>>**

வியட்நாமில் நேரிட்ட படகு விபத்து குறித்து முழுமையான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் திரு. Le Minh Hun தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மும்பையில் உள்ள அந்நாட்டின் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த விபத்துக்கான காரணங்கள் குறித்து கண்டறியுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விதிமுறைகளைப் பின்பற்றாத காரணத்தால் இந்த விபத்து ஏற்பட்டிருந்தால், அதற்கு காரணமானவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற விபத்துகள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் அமல்படுத்தப்படும் என்று அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

மணிப்பூரில் ஆளுநர் கோப்பை Taekwondo போட்டியை, அம்மாநில முதலமைச்சர் திரு Yumnam Khemchand Singh நேற்று தொடங்கி வைத்தார்.

இம்பாலில் உள்ள குமன் லாம்பாக் உள்ளரங்க விளையாட்டு அரங்கில், நடைபெறும் இப்போட்டி, ஜூலை 15-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இப்போட்டியில், 29 பிரிவுகளைச் சேர்ந்த மொத்தம் 1,141 விளையாட்டு. வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய அம்மாநில முதலமைச்சர், 40-க்கும் மேற்பட்ட சர்வதேச அளவிலான விளையாட்டு வீரர்களை மணிப்பூர் மாநிலம் உருவாக்கியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

திறமையான விளையாட்டு வீரர்களை வளர்ப்பதில் 'அனைத்து மணிப்பூர் Taekwondo சங்கம்', அதன் தொழில்நுட்ப அதிகாரிகள், பயிற்சியாளர்கள், ஆசிரியர்களின் உறுதியான அர்ப்பணிப்பு உணர்வு இந்த வெற்றிக்குக் காரணமாக உள்ளது என்று திரு Yumnam Khemchand Singh கூறினார்.

<<<<>>>>

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு பரவலாக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு-கஷ்மீர், லடாக், ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப், சண்டிகர், ஹரியானா, தில்லி, சத்தீஸ்கட், ஜார்கண்ட், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், ஒடிசா, திரிபுரா, அருணாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே அசாம், மேகாலயா, சிக்கிம், பிஹார் மாநிலங்களில் இன்று கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

இதனிடையே கேரள மாநிலம் வயநாட்டில் உள்ள கல்லாடி பகுதியில் நேரிட்ட நிலச்சரிவு குறித்து ஆய்வு செய்வதற்காக 5 உறுப்பினர் கொண்ட நிபுணர் குழுவை அம்மாநில அரசு அமைத்துள்ளது.

புவிசார் விஞ்ஞானி டாக்டர் சி.பி. ராஜேந்திரன் தலைமையிலான இக்குழு, பாதுகாப்பு குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்து தனது அறிக்கையை ஒருமாத காலத்திற்குள் அம்மாநில அரசிடம் சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அம்மாநில வருவாயத்துறை அமைச்சர் திரு. அணில்குமார் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஹோர்முஸ் நீரிணைப் பகுதி வழியாக சைப்ரஸ் நாட்டின் கொடியுடன் சென்ற சரக்கு கப்பல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதற்கு எதிராக அமெரிக்கா மீண்டும் வான் தாக்குதலை நடத்தியது.

இதுதொடர்பாக அமெரிக்க ராணுவம் வெளியிட்டுள்ள செய்தியில் அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவுறுத்தலின்பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஹோர்முஸ் நீரிணை பகுதி அடுத்தகட்ட அறிவிப்பு வரும் வரை மூடப்படுவதாக ஈரான் அறிவித்துள்ளது.

இதனிடையே மேற்காசியாவில் பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில் ஈரான் உடனான சண்டைநிறுத்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

ஹோர்முஸ் நீரிணைப் பகுதி வழியாக சைப்ரஸ் நாட்டின் கொடியுடன் சென்ற சரக்கு கப்பல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதற்கு எதிராக அமெரிக்கா மீண்டும் வான் தாக்குதலை நடத்தியது.

இதுதொடர்பாக அமெரிக்க ராணுவம் வெளியிட்டுள்ள செய்தியில் அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவுறுத்தலின்பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஹோர்முஸ் நீரிணை பகுதி அடுத்தகட்ட அறிவிப்பு வரும் வரை மூடப்படுவதாக ஈரான் அறிவித்துள்ளது.

இதனிடையே மேற்காசியாவில் பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில் ஈரான் உடனான சண்டைநிறுத்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் Prithika Pradeep வெண்கலப் பதக்கம் வென்றார்.

ஸ்பெயினின் Madrid-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் தனிநபர் பிரிவில் அவர் இப்பத்தாக்கத்தைக் கைப்பற்றினார்.

--------------

இங்கிலாந்திற்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 269 ரன் முன்னிலை பெற்று வலுவான நிலையில் உள்ளது.

லண்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 21 ரன் என்ற முந்தையநாள் ஸ்கோருடன் ஆட்டத்தைத் தொடங்கிய இங்கிலாந்து, தனது முதல் இன்னிங்சில் 170 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனையடுத்து, தனது இரண்டாவது இன்னிங்க்ஸை ஆடி வரும் இந்தியா, இரண்டாம் நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 154 ரன் எடுத்தது.

இந்தியா தனது முதல் இன்னிங்சில் 285 ரன் எடுத்தது.

<<<<>>>>